# அன்பிற்குரிய நண்பர்களுக்கு வணக்கம்.

நிலை 2 பிழையில்லாமல் பேசுதல், எழுதுதலுக்கான இணையவழிப் பயிற்சியில் இணைந்த உங்களை அன்போடு வணங்குகிறேன்.

பயிற்சியை நிறைவாகவும், செறிவாகவும் பெறுவதற்கான வழிமுறைகளை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

அருள்கூர்ந்து உள்வாங்கி அதன்வழி இயங்கி வெற்றி பெறத் திட்டமிடவும்.

இணையவழிப் பயிற்சி என்பதால் கைபேசியில் பார்ப்பது, படிப்பது என்பது நிறைவாக இருக்காது. கணினியைப் பயன்படுத்தி, மின்அஞ்சலில் உங்களுக்கு அனுப்பப்படும் மடல்களைத் திறந்து, படித்து, சேமித்து வைக்கவும். ஒவ்வொரு மடலிலும் அடுத்த மடல் அனுப்புகிற நாளைக் கீழே குறிப்பிட்டு இருப்பேன். இந்திய நேரப்படி காலை 10 மணிக்குள் உங்களுக்கான மடலை அனுப்பி விடுவேன். குறிப்பிடுகிற நாளில் ஒரு நேரத்தை ஒதுக்கிக் கொண்டு, எப்படியாவது மடலைப் பார்த்து விடவும்.

நிலை 2 பிழையில்லாமல் பேசுதல், எழுதுதலுக்கான இணையவழிப் பயிற்சியைக் கீழ்க்கண்டவாறு வடிவமைத்துள்ளேன்.

1) பயிற்சிக்கான கருத்துருக்கள், கூடுதல் கருத்துருக்கள் = கருத்துருக்கள் 2 முதல் 5 பக்கங்களுக்குள் இருக்கும். பயிற்சிக்கான கருத்துருக்களைத் தட்டச்சு செய்து அவற்றை படவடிவக் கோப்புகளாக்கி இணைத்திருப்பேன். கருத்துருக்களுக்கு விளக்கம் தரும் வகையில் அமைந்த நூல்களின் பக்கங்கள், இணையபக்கங்கள், நூல்கள் - கூடுதல் கருத்துருக்களாகப் படவடிவக் கோப்பு வகையிலேயே இணைக்கப்படும். கணினியில் படித்து உள்வாங்க இயலுமானால், கணினியில் ஒரு கோப்பில் சேமித்து வைத்துப் படிக்கலாம். இல்லையென்றால் அ4 அளவுள்ள தாளில் அனுப்புகிற கோப்புகளை அச்சாக்கிப் படிக்கலாம். படிக்கும் பொழுது உங்களுக்கு முதன்மையானதாகத் தோன்றும் கருத்துருக்களை அடிக்கோடிட்டு வைக்கவும். அடிக்கோடிடுகிற வரிகள் உங்கள் மனதில் ஆழமாகப் பதிந்துவிடும். ஒன்றுக்கு இரண்டுமுறை படித்து - படித்த கருத்துருக்களை உங்கள் நெஞ்சில் வரிசைப் படுத்தினால் அந்தக் கருத்துருக்கள் உங்களுக்குள் நிலைத்து நிற்கும். உங்களுக்குள் பதிந்து நிற்கும் கருத்துருக்கள் தான் உங்களை வழிநடத்தும். எனவே படிப்பதும், படித்தவற்றை மீள்பார்வை செய்வதும், முதன்மையானது.

பயிற்சிக்காகப் பல்வேறு நூல்களைப் பார்த்து, எனக்குச் சரி என்று தோன்றிய கருத்துருக்களை மட்டுமே நான் வரிசைப்படுத்தியுள்ளேன். பிழையிருந்தால் அருள்கூர்ந்து பொருத்தருள்க. சரியானவற்றை உள்வாங்கி மேலெழுப் படிஅமைத்துக் கொள்ளவும். எழுதுவதிலும், பேசுவதிலும் எழுகிற பிழைகளை அறிவதும், அவற்றை விலக்குவதும் இந்தப் பயிற்சியின் முதன்மை நோக்கமாக இருக்கட்டும்.

2) ஊக்கப்பாடல்கள் = தமிழம்.பண்பலையின் தொகுப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள் இவை.

3) தமிழிய உரைகள் = தேவநேயப் பாவாணர் மதுரையில் ஆற்றிய இறுதிப் பேருரை, பெருஞ்சித்திரனார் திருக்குறளை விளக்கி ஆற்றிய உரைகள்.

4) 1330 திருக்குறளில் படிப்பவரே உரையைச் சொல்லும் வகையில் அமைந்த 303 திருக்குறள்களின் தொகுப்பு, (இசையுடன்)

நிலை 2 பயிற்சியில் மேலுள்ள நான்கு தலைப்புகளில் கருத்துருக்களை ஒவ்வொரு மடலிலும் நான் அனுப்ப உள்ளேன். பயிற்சியாளர்கள் தங்கள் கணினியில் 4 கோப்புகளைத் திறந்து அதில் அனுப்புகிற கருத்துருக்களைத் தனித் தனியாகச் சேமித்து வைக்கவும். இல்லையென்றால். என்ன அனுப்பப்பட்டன, அவை எதற்காக அனுப்பப் பட்டன என்று தெரியாமல் குழம்ப நேரிடும்.

பயிற்சிக்கான காலம் ஒரு திங்கள் மட்டுமே. கருத்துருக்களின் செறிவுக்குத் தகுந்தவாறு காலம் தரப்படும். தொடர்ந்து அனுப்பப்படும் கருத்துருக்களைப் படித்து எனக்கு (pollachinasan@gmail.com) மடல் எழுதலாம்.

பயிற்சியை நிறைவாக உள்வாங்கி மேலெழுவது உங்களின் தொடர் உழைப்பில் உள்ளது. எனவே அருள்கூர்ந்து ஈடுபாட்டுடன் இயங்கி மேலெழ என் அன்பு வாழ்த்துகள்.

அன்புடன்

ம.நடேசன், M.Natesan., M.A., M.Sc., M.Ed., M.Phil., DDE, (பொள்ளாச்சி நசன்)

pollachinasan@gmail.com - 97 88 55 2061, skype ID: pollachinasan1951

(தமிழம்.பண்பலை) http://www.thamizham.net/thamizhamfm.htm

(கல்விக்கான எனது தளம்) http://www.pollachinasan.co.in/tt/index.htm

(தமிழின பதிவுக்கான எனது இணைய தளம்) http://www.thamizham.net